REGD. No. M. 6311

'PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 252

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: பங்குனி 24உ செவ்வாய் (6—4—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 25உ புதன் (7—4—54)

ஏழையின் சிரிப்பே இறைவன் இருப்பு!

—(:)—

பாட்டாளி வாடி வதங்க இடமிராது—முதலாளி கொழுக்க விடமாட்டோம்!

—(:)—

புரையோடிய சமுதாயத்தைப் புதுப்பிக்கும் பணியில் தி. மு. க. முன்னேறிச் செல்லும்

அரசியல் அரங்கு காட்சி மாற்றத்தால் நம் லட்சியம் மாருது

எதிர்கால நிலைகள் பற்றி பொதுச்செயலாளர் விளக்கம்

சென்னை, ஏப். 6—

"'திராவிட நாட்டில் கடவுள் இருக்குமா?'—என்ற சந்தேகக் கேள்வி சிலரால் கேட்கப்படுகிறது. எனக்குள்ள சந்தேகம், திராவிட நாட்டில் இருக்குமா என்பதிலே அல்ல; இன்றைய நாட்டில் கடவுள் இருக்கிறதா என்பதிலேதான். அநீதியும், கொடுமையும், வஞ்சகமும் மலிந்த நாட்டில் கடவுள் எப்படி இருக்க முடியும்? எனவே, பக்தர்கள் தேடியும், அவர் இருக்குமிடம் தெரியாமல் தவிக்கின்றனர். ஆனால், 'அறிவே ஆண்டவன்; அன்பே கடவுள்,' என்ற தத்துவத்தை ஒப்புக்கொள்வதானால், திராவிட நாட்டில் அந்தக் கடவுள் வாழ்வதைக் காணலாம்; கவிஞர் தாகூர் கூறினார்—'ஏழையின் சிரிப்பிலேதான் கடவுள் இருக்கிறார்,' என்று! பொது நலத் தொண்டிலே, பாட்டாளியின் வாழ்விலே, ஏழையின் சிரிப்பிலே மலரும் கடவுள், திராவிட நாட்டிலே இருப்பார் என்பதைத்தான் நினைவில் இருத்த வேண்டுகிறேன்."

என்று 4—4—54 மாலை 6 மணிக்கு ஓட்டேரி, தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்புப் பொதுக்கூட்டத்தில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"தி. மு. கழகம், ஆள்பவரைப் பொறுத்து தனது கொள்கையையும், இலட்சியத்தையும் சிறிதும் மாற்ருது என்று தெரிவிக்க விரும்புகிறேன். ஆள்பவர், 'ஆரிய இனமா? திராவிட இனமா?'—என்பதில் அல்ல நமது கவலை; ஆள்பவர், மக்களுக்கு நன்மை விளையும்படி ஆள்கிருரா? தீமை செய்கின்ருரா?—என்பதே நம் கேள்வி.

தி. மு. கழகம் அரசியல் நிலை குறித்து ஆராயுமே அன்றி, அதிலேயே மூழ்கிவிடாது. அரசியல் விளைவுகளைப் பற்றித் தனது கருத்தை அவ்வப்போது அறிவிப்பினும், திராவிடத்தின் விடுதலையை, புரையோடியுள்ள சமுதாயத்தைப் புதுப்பித்து அமைப்பதைத்தான் முக்கியமாகக் கொள்ளும். இடையில் அரசியல் நாடக அரங்கில் ஏற்படும் எந்தக் காட்சி மாற்றமும் நமது இலட்சியத்தை மாற்றிவிடாது

ஆச்சாரியாரின் 'அரசியல் மறைவு' அரங்கேறும் அமைச்சர்களுக்கு ஓர் படிப்பினை!

இன்றே, ஆச்சாரியார் அமைச்சர் குழு தோற்கடிக்கப்பட்டு விலக்கப்பட்டுள்ளது; காமராசர் குழு வெற்றி பெற்றிருக்கின்றது. எது காரணம் என்பதைக் கருத வேண்டும்—ஆச்சாரியார் எவ்வளவுதான் மேதையாக இருப்பினும், அறிவு ஆற்றலிலே சிறந்தவர் என்று அனைத்துக் கட்சியினராலும் கருதப்படினும், அவர் இதயமற்றவராகவே இருந்துள்ளார்; அவரே ஒருமுறை கூறிக்கொண்டது போல், அவரது மனம் கல்மனம் சிறிதளவும் இளகாத இரும்பு நெஞ்சம்; எனவேதான், ஜனநாயகத்தை, மக்களின் மகத்தான குரலை, வேண்டுகோளை மதிக்க மறுத்தார். அவருடைய ஆட்சி, ஜனநாயகத்தை மதிக்க மறுத்த எதேச்சாதிகார ஆட்சியானதால், அவரால் திணிக்கப்பட்ட புதுக் கல்வித் திட்டம் கலைக்குதவாதது, தீமை பயக்கும் என்றெல்லாம் எடுத்துக் கூறியும், விளக்கிப் பார்த்தும்கூட, சிறிதும் லட்சியம் செய்யாது நடந்தார். மக்கள் விருப்பத்தை மதிக்க மறுத்தவர், அரசியல் நாடக அரங்கிலிருந்தும் மறைகிருர்; புது அமைச்சர்கள் புறப்படுகின்றனர்—அவர்களேனும் மக்கள் கருத்தை மதித்து நடக்க வேண்டும்; புதுக் கல்வித் திட்டத்தை உடனடியாக 'வாபஸ்' பெற வேண்டும். புது அமைச்சர் குழுவின் முதல் வேலை அதுதான்.

இல்லையேல், நமது கழகம், மறுபடியும் தனது எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டே தீரும் என்பதையும் எச்சரிக்க விரும்புகிறேன்.

தோழர் அண்ணாதுரை அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:—

சென்னை, ஓட்டேரி, தி. மு. கழகத்தின் சார்பில், தூத்துக்குடி, கல்லக்குடி, வழக்குக்கு நிதி வழங்கியதற்கும், அதை வழங்கிய மக்களின் ஆதரவிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வழக்கு நிதி, எத்தகைய கொடுமையினின்றும் நமது தோழர்களைக் காத்து நீதியைப் பெறுவதற்காக வழங்கப்படுகிறது என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள். எனவே தான், கேட்டது, ரூ 20,000 எனினும், கிடைத்தது ரூ 26,000 ஆக உள்ளது; மேலும் வரவேண்டிய தொகை சேர்ந்து ரூ 30,000 ஆகும் என்று நம்புகிறேன்.

இந்தப் பெருங்கூட்டம் முழுவதும், 'கல்வித் திட்டம் ஒழிய வேண்டும்—ஒழிக்கப்பட வேண்டும்', என்றுதான் கருதுகிறது; இல்லையேல், அமைச்சர் குழு மாற்றப்படுவதால் மட்டும் மக்கள் திருப்தியடைய மாட்டார்கள் என்பதை அவர்கள் உண

(4-ம் பக்கம் பார்க்க)

காமராசரின் திண்டாட்டம்!

—:o:—

இருதலைக் கொள்ளி எறும்பாகிருர்!

—(:)—

வடநாடு — தென்னுடு பேதத்திற்கு அவரே ஒரு எடுத்துக்காட்டு!

ஆரிய — திராவிட வேற்றுமையின் எதிரொலி!

டில்லி, ஏப். 6—

தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராசர், சென்னை சட்ட சபை காங்கிரசு கட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையை அனுமதிக்கக் காங்கிரசுக் கட்சி (பாராளுமன்ற நிர்வாகக் குழு) மறுக்கிறது என்று தெரிகிறது.

பண்டித நேரு, காமராசர் சட்ட சபைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால், அவரேதான் முதல் மந்திரியாகவும் பொறுப்பேற்க வேண்டுமென அறிவித்துள்ளாராம்; ஆனால், முதல் மந்திரியாகவும், மாநில கட்சித் தலைவராகவும் ஒருவரே இருக்கக்கூடாது என்பதையும் வலியுறுத்துகிருராம்.

காமராசர்—ஒன்று, தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவியைக் கைவிட வேண்டும்; அல்லது சட்ட சபைக் கட்சித் தலைமையைக் கைவிட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

டில்லியிலுள்ள தமிழ் நாடு காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களும், பிறரும், காமராசர் வெற்றி பெற்றதைக் குறித்து மகிழ்ச்சியடைந்திருந்தனர். காமராசர் தலைமையில் சென்னையில் மந்திரி சபை அமைவதையும் விரும்பி இருந்தனர்.

அவர்களது விருப்பங்களுக்கு உலை வைப்பது போலத்தான்—மேலிடத்தின் தீர்மானம், காமராசருக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் பெருத்த கலவரத்தை விளைவித்துள்ளது.

காமராசரின் நண்பர்கள் பலர், தமிழ் நாடு காங்கிரசுத் தலைமைப் பதவியை விட்டு விட்டேனும், காமராசர், மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்று அவரிடம் வலியுறுத்தி வருகிருர்களாம்.

காமராசர், இரண்டு பதவிகளில் ஒன்றை விடவேண்டும் என்று வற்புறுத்தலைக் குறித்து, காங்கிரஸ்கட்சியினரே பலவிதமாகக் கருதுவதாகத் தெரிகிறது.

இதை வலியுறுத்தும் பண்டித நேரு, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராகவும் இருந்துகொண்டு, பிரதம மந்திரியாகவும் இருப்பதைச் சுட்டிக்காட்டி—நேருவும், காமராசரும் காங்கிரஸ்தானே, ஏன் ஆளுக்கொரு நீதி—என்று பேசுவதாகவும் தெரிகிறது.

நேரு—பெருந் தலைவர்; காமராசர் என்ன இருந்தாலும் தொண்டர்தானே! நேரு—பிராமணோத்தமர்; காமராசர் குலப் பெருமை கொண்டவரல்லவே! நேரு—வடநாட்டார்; காமராசர் திராவிட நாட்டார்தானே! நேரு—ஆளும் மரபு; காமராசர்—அம்மரபை எதிர்க்கும் மரபுதானே—என்று இப்படிக் குமுறல் பல வடிவிலே கிளப்புவதாகத் தெரிகிறது.

என்ன இருந்தாலும், 'காங்கிரஸ்' முக்கியமல்லவா? எனவே, மான அவமானத்தைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்று தெரிகிறது.

மேலும் சில வட்டாரங்களில், காமராசர், ஜனநாயக முறையில் பேராதரவுடன் வெற்றி பெற்ருர்; அதற்கு சட்டம் காட்டி, 'இரண்டு பதவிகளிலே இருக்காதே,' என்கிறது 'காங்கிரஸ்' நிர்வாகம்; ஆனால், அன்று ஆச்சாரியார், கொல்லைப் புறமாக, தேர்தலுக்கு நிற்காமலே உள்ளே நுழைந்தபோது அவரைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று இந்தக் காங்கிரஸ் தடுக்கவில்லை; மாருக, ஆதரித்தது; மக்கள் ஆதரவு இல்லாவிட்டாலும் ஆச்சாரியாருக்கு ஒரு நீதிதான்; அவரை எதிர்த்து முழு ஆதரவோடு வெற்றி பெற்ருலும் காமராசருக்கு ஒரு நீதிதான்—என்றும் பேசுகின்றனர்.

காமராசர் காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவியைத்தான் விட்டுவிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அந்தக் காலி இடத்திற்கும் டாக்டர் சுப்பராயனைக் கொண்டுவரக் கூடும் என்று வதந்தி உள்ளது.

காமராசர் முதல் மந்திரியாக வந்தால், மறுபடியும் சென்னை சட்டசபை இடம் ஒன்றுக்குத் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அதன் பயனாக, அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழக்க வேண்டும். அந்த இடத்தை நிரப்பவும் ஒரு தேர்தல் நடைபெற்ருக வேண்டும்.

காமராசர் வெற்றி பெற்ருர்! ஆனால், வெற்றிக்குப் பின்னர்தான், நாற்புறமும், 'சிக்கல்' வளர்ந்திருப்பதை, அவரது ஆதரவாளர்கள் ஆச்சரியத்தோடு நோக்கிக் கொண்டுள்ளனர்.

ஆச்சாரியாருக்கு அமையும் 'ராஜபாட்டை'யே வேறு! காமராசருக்கு வாய்க்கும் பதவிப் பாதையே வேறுதான் என்ற கருத்து நிலவுகிறது.

காமராசர், டில்லியிலேயே ஒரு முடிவைத் தெரிவித்துவிட்டுத்தான் சென்னை திரும்புவார் எனத் தெரிகிறது.

இவ்வளவுக்கும் இடையில்,

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 6—4—54 செவ்வாய்

ஐயரின் சூதர்க்கம்!

“ஆரியர்—திராவிடர் சர்ச்சைக்கு ஆதாரமே கிடையாது” என்று கூறியிருக்கிறார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய சர். சி. பி. இராமசாமி ஐயர்!

மேலும், “பழைய காலத்து வேதங்களையும், புராணங்களையும், சங்க நூல்களையும் ஒருவர் நல்ல முறையில் படித்து ஆராய்ச்சி செய்தால், தற்போது ஏற்பட்டுள்ள ஆரிய-திராவிட பிரச்னைக்கும், ஆரியர் வெளிநாட்டிலிருந்து வந்தார்களா? திராவிடர்கள் வெளி நாட்டிலிருந்து வந்தார்களா—என்ற விவாதங்களுக்கும் ஆதாரமே கிடையாது என்பது தெரிய வரும்” என்றும் கூறியுள்ளார்.

மணமாகாமலே, மடியிலே குழந்தையைப் பெற்றெடுத்து ஏந்தியுள்ள ஒருத்தி தன் நிலையில் தோன்றும் இழுக்கை மறைக்க, மற்றொரு குடும்பப் பெண்ணைப் பார்த்துக் கூறினளாம், ‘தவறான வழியில் பிறந்தது தன் குழந்தையா அவள் குழந்தையா என்பது அறுதியாகும் ஆண்டவனைத் தொழும் தவசிகளுக்கே தெரியும்,’ என்று!

அதுபோல, ஆரியர்கள் வந்தார்கள், நுழைந்தார்கள், சிறிது சிறிதாக இடம் பெற்றார்கள், செல்வாக்கைத் தேடிக் கொள்ள நயவஞ்சகமாக நடந்தார்கள், வாழ்ந்த இனத்தை வீழ்த்தினார்கள்—என்றெல்லாம் பக்கம் பக்கமாக—அல்ல அல்ல—புத்தகம் புத்தகமாக—பலப் பல ஆராய்ச்சியாளர்களால் எழுதப்பட்டு, ஏற்கப்பட்டு, படிக்கப்பட்டு, நிலை நாட்டப்பட்டுள்ள இக்காலத்தில், ஆரியர்கள் ‘வந்தேறி’கள் என்பதை மறுக்க வகையற்று, திராவிடர்களும் ‘வந்தவர்கள்’ என்று சொல்லிச் சப்புக் கொட்டிக் கொள்வது மிக மிகக் கீழ்த்தரமான புத்தியாகும்.

உயர்தர உத்தியோகத்திலே உள்ள ஒரு பிராமணனைத் தமர்—இலட்சக்கணக்கில் லஞ்சம் வாங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விலங்கிடப்படும் போது, “பொறுங்கள், பொறுங்கள்; என் மகன் என்னைக் கேட்காமலே ஓரணாவை எடுத்துக்கொண்டு போய்விட்டான்; அதை விட்டு வைக்கலாமோ நாம்; அவனைக் கண்டித்துவிட்டு வருகிறேன்” என்று சொல்லி நழுவப் பார்க்கிற காட்சி போலத்தான் இந்தக் காட்சியும் தெரிகிறது.

ஆராய்ச்சி என்பது ஒரு பெருங் கடல்; அதற்குக் கரை இல்லை என்பர். ஆனால், கடலில் தோன்றும் அலை அவ்வளவும் கரையில் மோதுவது போல, ஆராய்ச்சியால் எடுக்கப்படும் பல முடிவுகள் கரை கண்ட முடிவாக நிலை பெறும். நிலை பெறாத ‘முடிவுகளும்’ உண்டு. ஆரியர்கள் ‘வந்தேறிகள்’ என்பது நிலை பெற்ற முடிவு. ‘திராவிடர்கள் வந்தார்கள்’ என்பது சான்றில்லாத, உறுதிப்படுத்த வகையற்ற, ஒப்புக் கொள்ளப்படாத சரித்திர ஊகம் ஆகும். ஊகம், உண்மையாக, சான்றுகள் வேண்டும். ஆனால், ஐயர், உண்மையை மழுப்ப, ஊகத்தைத் தூணாக்கிழுத்து, அந்த யூகத்தை மக்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்களாதலின், அத்துடன் உண்மையையும் ஒதுக்கிவிடுவர் என்றெதிர்பார்க்கிறார்.

அதற்குத் துணையாக வேதத்தையும், இதிகாச புராணங்களையும் கூப்பிடுகிறார்; சங்க இலக்கியத்தையும் இழுக்கிறார். அவற்றை மக்கள் படித்தால், ஆரியர்—திராவிடர் பிரச்னைக்கே இடமில்லை என்கிறார். ஐயகோ! அவரது அறியாமையை எண்ணிச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

அந்த இதிகாச புராணங்களை இதுகாறும் மக்கள் படிக்காமல் இருந்தார்களா? படிப்பதற்குக் கிடைக்காமல் இருந்தனவா? வேண்டுமானால், சங்க இலக்கியத்தை இடையிலே மக்கள் கைவிட்டிருந்தனர். ஆனால் அவற்றை, யார் படிக்க வேண்டாமென்றவர்கள்? வேத புராணங்களை, சமஸ்கிருதத்திலே மூடிவைத்துக்கொண்டு மற்றவர்கள் படிக்கக்கூடாது என்று செய்தவர்களும், சங்க இலக்கியத்தை மக்கள் மதிக்காத மனப்போக்கை உண்டாக்கியவர்களும் யார்! அதற்குக் காரணமும், ஐயர்வாளது முன்னோர்கள்தானே? இப்பொழுது படிக்கக் கூறுகிறாரே, படித்தால், ஆரிய-திராவிட வேற்றுமை பொய் என்று கருதத் துணையாகவிட்டாலும், ஐயர் ஆசைப்படுவதுபோல் வேற்றுமையை மறைக்கவாவது துணையாகுமா? என்று கேட்கிறோம்.

அவருக்கு அவற்றைப் பற்றிய உண்மையும் தெரியாது என்று எப்படிக் கருத முடியும்? ஒருவேளை ‘வயது இடம் காட்டை’ நெருங்குவதால் ஏற்படும் மறதியின் விளைவு போலும்!

அந்த வேத இதிகாசங்களைப் படித்து ஆராய்ந்தபோதுதான், ஆரிய—திராவிடர் வேற்றுமையின் உண்மையே வெளிப்படலாயிற்று. ஆரிய வேதத்திலே கொட்டப்பட்டிருந்த திராவிட வெறுப்பும், புராணங்களிலே நிரப்பப்பட்டிருந்த திராவிடப் பகையுமே—முதன் முதலாக—அந்த ஆராய்ச்சியை வளர்க்கத் தூண்டுகோலாயிற்று; அதை அறிந்த பின்னரே, சங்க இலக்கியத்தைப் புரட்டிய பெருமக்கள், அதன் கண்ணேயும், தமிழர்களின் நாகரிகப் பண்பாடு மேம்பாடுகளுக்கேற்ப மிகவும் கண்ணியமான வகையில் ஆரியத்தைப் பிரித்துக் குறிப்பிடுவதைக் கண்டுகொண்டனர். அந்த ஏடுகளிலே, எதைப் புரட்டினாலும், இந்த வேற்றுமை எந்த அளவு ஒற்றைக் கால் தாண்டவம் புரிந்திருக்கிறது என்பதைத்தான் காணலாமே தவிர, ஒற்றுமையின் சிற்றடையாளத்தையும் காணவியலாது என்பதை நினைவூட்டுகிறோம்.

மேலும் “பண்டைய காலத்தில் இமயத்திலிருந்து குமரி வரை வாழ்ந்திருந்த மக்கள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களது கலாச்சாரமும் ஒன்றாகவே இருந்தது என்பது புலப்படும்” என்றும் புலம்பியுள்ளார். இமயம் முதல் குமரி வரை கூட அல்ல, எந்த ஒரு இடத்திலேயுங்கூட, மக்கள் ஒரு குலமாக இருந்ததில்லை, இருக்க விட்டதில்லை என்பதுதானே இந்நாட்டுப் புராண இதிகாசச் செய்திகள். அதிலும், ஜாதியைத் தோற்றி வைத்து, மக்களைப் பிளவுபடுத்தி, அதைக் கொண்டே ஆரிய (அ)நாகரிகத்திற்குச் செல்வாக்குத் தேடியவர்கள், என்று தடையின்றி ஒப்புக் கொள்ளப்படும் ஆரியரையும் சேர்த்து ஒரே குலம் என்பது எப்படி உண்மையாகும்?

ஆரியம் வருமுன்னர் வேண்டுமானால், ஒரே குலம் என்று சொல்லும் தன்மை மக்களிடையே இருந்ததை நாம் அறிவோம். அந்த நிலையல்லவே ‘ஐயர்’ கூறுவது! மேலும் அவர்களது கலாச்சாரம் ஒன்றாகவே இருந்தது என்று கூறுகிறாரே, எப்படி ஒன்றாக இருந்திருக்க முடியும்? இதிகாசங்களிலே, புராணங்களிலே சான்று காட்ட முடியுமா?

ஐவருக்குத் தேவி, அழியாத பத்தினி என்று பாராட்டப்படும் திரௌபதியின் பண்பு, தமிழர்க்கு உடன்பாடா? அல்லது கண்ணகியின் கற்புடைமைகூட அல்ல, மாதவியின் கற்பேனும் ஆரியருக்கு விளங்கி இருந்ததா?

கொடையைப் போற்றிய தமிழ் நாகரிகம் எங்கே? கிடைத்ததைச் சுருட்டிய ஆரியப் போக்கு எங்கே? தமிழர்களின் தனி நூலாம் திருக்குறள் எங்கே? ஒரு குலத்துக்கு ஒரு நீதி வகுத்த மனுநீதி எங்கே? இரண்டும் ஒன்றாகுமா?

விரிக்கின் பெருகும். அவரே குறிக்கிறாரே சங்க இலக்கியம் என்று; அதற்கும் அவர் குறிப்பிட்ட வேத புராணங்களுக்கும் உள்ள வேற்றுமை சிறிதா? இல்லையேல், அவர் ஏன், தமிழ் மொழியில் உள்ள எட்டிலும் சிலவற்றைக் குறிப்பிட்டு வைக்கலாம் என்ற கருத்தோடு அதைக் குறிப்பிடுகிறார்? அதிலேயே தெரிகிறதே, இரண்டும் வேறு வேறு, கலைப் பண்பாடு என்பது.

அதற்குச் சான்று காட்டுகிறார்! சைவசித்தாந்தம் காஷ்மீர்-நேப்பாளம்-வங்காளம் ஆகிய இடங்களில் பரவி இருப்பதை! கலாச்சாரமும், சமயமும் வேறு என்பதுங்கூட விளங்காதவர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர்களாவது வேதனையாகும். கீழ்நாடுகளிலே கிறித்துவம் பரவி இருப்பதும், சீனாவில் புத்தம் பரவி இருப்பதும், உலகின் பல பகுதிகளில் இஸ்லாம் இடம் பெற்றிருப்பதும் கலாச்சார ஒற்றுமையையா காட்டும்? நல்ல வேளையாக, எடுத்துக்காட்டாகக் கருதி, ‘எம்மவர்களைப் பாருங்கள்; எங்குமல்லவோ வியாபித்திருக்கிறோம், அது ஒன்றே கலாச்சார ஒற்றுமைக்குச் சான்று’ என்று கூறாமற் போனார். அறிவாளி அல்லவா?

அவரே கூறுகிறார்—சப்பத்தில் மொஹஞ்ஜதாரோ, ஹாரப்பா முதலிய இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பழம்பெரும் நகரங்கள் இரண்டு, திராவிட நாடுகளின் தலைநகரங்களாக இருந்தன என்றும், திராவிட மொழிகளின் சில சொற்களுக்கும், அங்கு பேசப்படும் மொழிகளின் சொற்களுக்கும் ஓரளவு ஒற்றுமை காணப்படுகிறது, என்றும்!

ஒற்றுமை காணப்படுவது இருக்கட்டும்; ஏன், ஒரு காலத்திலே, திராவிட நாடுகளின் தலைநகர்களாக விளங்கியவை, இப்பொழுது வெறும் சின்னங்களாகும் நிலை பெற்றன? அங்கு வழங்கிய திராவிட மொழி அழிந்து ஒன்றிரண்டு சொற்களளவிலே ஒற்றுமை தேடவேண்டிய அழிவு நிலை திராவிடத்திற்கு ஏற்பட்டதேன்?

இந்தக் கேள்விகளை எழுப்பி, இந்த அழிவுக்குக் காரணம், ‘ஆரியம்’ என்பதை வரலாறு ஏடு புட்டுக் காட்டுவதால்தான், ஆரியர்—திராவிடர் பிரச்னை பொய் யென்று கருதும்படிச் செய்ய விரும்பும் ஐயர், இதிகாச புராணங்களைப் படிக்கச் சொல்கிறார். வறுமையால் வாடு பவனைப் பார்த்து, வளைந்த வழியைக் காட்டி ஏமாற்றுவது போலத்தான், வரலாற்று உண்மையை வேத ஏட்டிலே தேடச் சொல்கிறார் அவர். அதற்குத்தான் போலும், பல்கலைக் கழகத்தில் ஓரவை பாக்கி இன்றி அவரையே ஓயாது சொற்பொழிவாற்றச் செய்து கொண்டுள்ளனர், அங்குள்ள பேராசிரியர்கள்!

ஆனால், அவர் உணர வேண்டும், காலம் மாறிவிட்டது என்பதை! தம்மை ஆரியர் என்றோ, திராவிடர் என்றோ அவர் கூறிக்கொள்ள வேண்டுமானால் அவருக்கு உரிமை இருக்கலாம். சந்தேகமாக உணர்ந்தால் மாற்றி மாற்றியுங்கூடக் கூறிக் கொள்ளலாம். ஆனால், திராவிட இனத்தின் தொன்மையை, தனித்தன்மையை, உரிமையை இழிவுபடுத்தும் முறையில் ஆரியத்தோடு இணைத்துப் பேச அவருக்கு மட்டுமல்ல, வேறு எவருக்கும் உரிமை இல்லை.

‘பிராமணர்கள் ஆரியர்’ என்பதை வேண்டுமானால், விரும்பாவிட்டால், வேதனையாக இருந்தால்—திராவிடர் என்று சொல்லிக்கொள்ளலாம் அவர்கள்! மற்ற மக்களும், அவர்களது நிலையை ஆராய்ந்து, வழி வழி வந்த ஆரியருமல்ல — மானமுள்ள திராவிடருமல்ல என்று தீர்மானிக்கலாம்; ஆனால், திராவிடர்களது தனி உரிமையை, விடுதலை வேட்கையைத் தடுக்க முனைவது நெருப்போடு விளையாடுவதாகும்.

ஆரியர்—திராவிடர் பிரச்னை அன்று இருந்ததில்லை என்று சொல்லத்தான் சச்சிவோத்தமர் இவ்வளவு குழப்புகிறார். ஆனால், அன்று இருந்தது என்பதை மட்டுமல்ல, அன்றொரு நாள் அம்மோதுதல் ஏற்பட்டதால் தான், இன்றளவும் அது புகைந்து கொண்டே இருக்கிறது என்பதை அவர் உணர வேண்டும். அன்று ஏற்பட்டது என்பதையே மறுத்து விடுவதாயினும், இன்று இருக்கிறது என்பதை, கண்கூடாகத் தெரிவதை யாரும் மறுக்க முடியாது.

அப்பிரச்சினை இருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் பலப் பல. முதல் சான்றுதான், அப்பிரச்சினை, பொய் என்று பேசும் பேச்சு! அப்பேச்சில் வழங்கும் திராவிடர், ஆரியர் என்று இனத்தைக் குறிக்கும் இரண்டு சொற்களுமே அதற்குச் சான்று. அச்சொற்களுக்கு உயிருள்ள வரையில் அப்பிரச்சினை இருக்கிறது என்பதுதான் பொருள். நோயிருந்தும் அதைத் தீர்க்க முயற்சிக்காமலிருக்கும் ஏமாளியைப் போலவோ, புண்ணை மூடி வைத்துக் கொள்ளும் மூடனைப்போலவோ சிலர் இருப்பதாலேயே அந்தப் பிரச்சினை பொய்யாகாது.

எந்தத் துறையிலே எடுத்துக்கொண்டு பார்த்தாலும் இந்தப் பிரச்சினை இருப்பது தெரியும், சிந்திப்பவர்க்கு!

சமுதாயத்தில்—உயர் பிறப்பாக ஆரியமும், இழிவுள்ள பிறப்பாக திராவிடமும் இருக்கிறது.

மதத் துறையில்—குருமார் பீடத்தில் ஆரியமும், அடியார் குலத்தில் திராவிடமும் இருக்கிறது.

மொழித் துறையில்—தேவ பாஷையைக் கொண்டு ஆணையிடுவதாக ஆரியமும், தமிழ் மொழியைக் கொண்டு பணி செய்வதாக திராவிடமும் இருக்கிறது.

கலைத் துறையில் — உயர்வுக்கும் போற்றுதலுக்கும் உரியதாக ஆரியமும், உரிய இடத்தை இழந்து ஒதுக்கப்பட்டதாக திராவிடமும் இருக்கிறது.

பொருளாதாரத் துறையில்—உழைப்பின்றி ஊதியம் பெறுவதாக ஆரியமும், பாடுபட்டும் பலனின்றி வாடுவதாக திராவிடமும் உள்ளது.

அரசியல் துறையில்—ஆதிக்கப் பீடத்தில் அமர்ந்து கொண்டு ஏதேச்சாதிகாரம் நடத்துவதாக ஆரியமும், உரிமைக்குப் போரிட்டு உயிர்த் தியாகம் செய்ய வேண்டியதாக திராவிடமும் இருக்கிறது.

இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளக்கூடிய கல்வித் துறையிலேயே, கல்விச் சாதனத்தைத் தனக்கே பயன்படுத்திக்கொண்டு, மற்றவர்களை நெருங்காது விலக்குவதாக ஆரியமும், நெருங்கமுயன்றும் வாய்ப்பின்றி வாடுவதாகத் திராவிடமும் உள்ளது.

ஆனால், அந்தப் பிரச்சினையெல்லாம் பொய் என்கிறார் சர். சி. பி.

ஆம்—பொய்யென்று சொல்வதைத் தவிர வேறு அறிவுள்ள வாதத்தையா அவரிடம் எதிர்பார்க்க முடியும்? அதற்கு இடமிருந்தால் அவர் எப்படி ‘ஆரியராக’ இருக்க முடியும்? ஆனால், அவரையும், அவரைப் போன்றோரையும் பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதே நமது அவாவாகும்.

ஜாப் முறையில் சாகுபடி

லட்சுமணபுரி, ஏப். 4—

உத்திர பிரதேசத்தில் உள்ள 29 மாவட்டங்களில், அடுத்த பருவத்தில் சுமார் லட்சம் ஏக்கர் நஞ்சை நிலத்தில், ஜப்பானிய முறைப்படி நெல் சாகுபடி செய்யப்படுமென்று அறிவிக்கப்படுகிறது.

ஜப்பானிய முறையில் சாகுபடி செய்வதால் ஏற்படும் பலாபலன்களை விவசாயிகளுக்கு நன்கு உணர்த்த மாநிலத்தின் விவசாய இலாகாவும், அபிவிருத்தி திட்ட இலாகாவும் அதிதீவிரமாக முனைந்துள்ளன.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

29—3—54-ம் நாள் இதழ்த் தொடர்ச்சி;	25,227-11—5
சென்னை-12 அ. மு. பழனி	4—0—0
சிவகங்கை தி. மு. கழகம்	15—4—3
,, மஜீத் படிப்பகம்	1—9—3
,, ராமச்சந்திரன் நினைவுப் படிப்பகம்	1—9—3
,, பொது நோக்கத்தார் கழகம்	1—9—3
ஜோகூர்பாரு (மலேயா) ஒரு (ஆதித் திராவிடர்)	15—0—0
,, வீ. ராமையா	7—8—0
,, மு தங்கவேல்	3—0—0
,, ந பொ. சந்திரகாசன்	12—0—0
தெலுக்கான் சென் (மலேயா) தோழர் அ. அன்பழகன் மூலம்:—	
பி. பாலையா	15—0—0
ச. ராமலிங்கம்	3—0—0
கா. கோவிந்தசாமி	3—0—0
சி. அழகப்பன்	1—8—0
அழ. வெள்ளச்சாமி	3—0—0
இரா. வேலன்	1—8—0
சி. மணியம்	3—0—0
ம. மாரிமுத்து	1—8—0
வீர. சேது	1—8—0
அ. கணேசன்	2—4—0
கா. முனுசாமி	1—8—0
மு. காளிமுத்து	7—8—0
கா. மாரிமுத்து	1—8—0
பி. சுப்ரமணியம்	1—8—0
மு. வெள்ளசாமி	1—8—0
அ ராமையா	4—8—0
கரு. சேது	3—0—0
இரா. முத்தையா	1—8—0
எ. மகமத் முகையதிம்	0-12—0
செ. ஆனந்தன்	1—8—0
சுப. சிவபுண்ணியம்	0-12—0
குப்புசாமி	0-12—0
செயராமன்	1—8—0
மணியம்	1—8—0
பி. ஆர். சுப்பையா	1—8—0
அ. சோலையா	1—8—0
வி. பொன்னுசாமி	0-12—0
தண்ணீர்மலை	3—0—0
எஸ். சக்திவேலு	1—8—0
வி. காளை	1—8—0
கா. இலக்குமணன்	1—8—0
இ. சின்னப்பன்	1—8—0
எம். நாராயணன்	1—8—0
எ. அப்பள நாயுடு	1—8—0
எஸ். செங்கழுனி	1—8—0
எ. கிருஷ்ணன்	1—8—0
கே. விரன்தண்டல்	1—8—0
எ. பச்சை	1—8—0
ஆர். முனியாண்டி	1—8—0
கே. சுப்ரமணியம்	1—8—0
வி. அண்ணாமலை	1—8—0
எம். ராமசாமி	1—8—0
கே. முருகன்	1—8—0
என். கோவிந்தராசு	1—8—0
எல். ஆறுமுகம்	1—8—0
பி ஆறுமுகம்	1—8—0
யு. ராமன்	1—8—0
கே. ஜெயராமன்	1—8—0
கே. குப்புசாமி	1—8—0
எஸ். லோக நாயுடு	1—8—0
எஸ். பச்சை	1—8—0
அ. அன்பழகன்	15—0—0
சென்னை 6-வது வட்டம் தி. மு கழகத் தோழர்கள்: தோழர் நெடுஞ்செழியன் மூலம்:—	
க. சிதம்பரம்	2—0—0
வே. தணிகாசலம்	2—0—0
பி. ஏ. வெங்கடேசலு	2—0—0
மதிவாணன்	2—0—0
தென்னவன்	2—0—0
எ. சண்முகவேலு	2—0—0
எம். கே. எம். ஜமால் மொகிதீன்	2—0—0
ஆ. துரைக்கண்ணு	2—0—0
பி. வி. ராதாகிருஷ்ணன்	2—0—0
கே. என். கருணைமணி	2—0—0
கோ. ஞா. சிவராமகிருஷ்ணன்	1—8—0
மு. குமரன்	1—0—0
மா. ராஜகோபால்	1—0—0
கா. சி. துரைக்கண்ணு	1—0—0
த. கோவிந்தராசன்	1—0—0
ஏ. பி சம்பத்	1—0—0
மு. தர்மலிங்கம்	1—0—0
எஸ். பி. சுப்பையா	1—0—0
ஆ. சுப்ரமணியம்	1—0—0
எஸ். இ. பாலையம்	1—0—0
ராகவன்	1—0—0
பி. வேணு	1—0—0
கே. என் கே. சாமி	1—0—0
சங்கரன்	1—0—0
பே. அ. செல்வவேலு	1—0—0
ஏ. பி. நடராசன்	1—0—0
மு. ஏழுமலை	1—0—0
எம். அப்புகுட்டன்	1—0—0
ஐ. ஏழுமலை	1—0—0
பி. ஜெ. திருநாவுக்கரசு	1—0—0
கே. கோவிந்தராசன்	1—0—0
பி. என். நடராசன்	1—0—0
பி. பாலசுப்ரமணியம்	1—0—0
கே. எம். சுப்ரமணியம்	1—0—0
பி. எஸ். சின்னதுரை	1—0—0
எம். சிவப்பிரகாசம்	1—0—0
வெஸ்லி டேவிட்	1—0—0
ஆராமுதன்	1—0—0
ஆர். ஜெயராமன்	1—0—0
கிருஷ்ணன், மேகவண்ணன், குப்புசாமி, செல்வராஜ், நாராயணசாமி, அப்துல்மலீக், மதுரை, முனுசாமி, கன்னியப்பன், கோ. பாலையா, லாது நபிஜூர், ஏகாம்பரம், சேரன் ஆகியோர்	6—4—0
ரயில் ஒர்க் ஷாப் தோழர்களிடமிருந்து வசூல்	9—7—6
பொதுக்கூட்ட உண்டி வசூல்	9-12—6
பந்தநல்லூர் நாக. சுப்ரமணியம்	1—0—0
நெல்குன்னம் அ. சின்னத்துரை	1—0—0
செய்க்குப்பை விவசாயிகள்	3—0—0
பஞ்சநதிக்குளம் ராவணன், சோமசுந்தரம், பழனி, பரஞ்சோதி, சேது சதாசிவம், கூத்தன, சிந்தனைச் செல்வன், தமிழன்பன், சுந்தரம், பாண்டியன், தெய்வசிகாமணி, காசிநாதன், லட்சுமணன் ஆகியோர்	21—0—0
பம்பாய்—தாராவி கே. எம். பிரகாசம்	5—0—0
கோலாலம்பூர் (மலேயா) ரங்கையா	8—0—0
,, மா. கந்தையா	3—0—0
,, பி. சா. குமரன்	3—0—0
,, அ ப. பழனிச்சாமி	3—0—0
,, ம. சண்முகம்	3—0—0
,, கருப்பையா	1—8—0
,, செ. சுப்பையா	1—8—0
எம். ஜி ராமச்சந்திரன் அவர்களிடம் கையொப்பம் வாங்கிய அன்பர்கள்	1—0—0
ஆலந்தூர்—சென்னை தி. மு. கழகம்	25—0—0
கீழ்ப்பாக்கம் — சென்னை வள்ளுவர் பகுத்தறிவு மன்றத்தார் 'நாம்' திரைப்படம் போட்டி வசூலித்ததில் செலவு போக மீதி	150—0—0
அசனமாபேட்டை ப சொக்கலிங்கம்	1—0—0
குன்னத்தூர் (கோவை) தி. மு கழகப் பொதுக்கூட்ட வசூல்	5-13—6
,, அப்துல் ரகிமான்	2—0—0
,, எம். ஏ. ரகிமான், என் எஸ். இப்ரகிம்	1—5—6
தேவகோட்டை ராம வெள்ளையன்	5—0—0
,, எஸ். எஸ். பி கிருஷ்ணசாமி	1—0—0
,, ராம. முத்துவேலன்	1—0—0
,, முத்துசாமி	1—0—0
,, வெள்ளைச்சாமி	1—0—0
,, துரைராஜ்	1—0—0
கமுதி இ. ல. ம. சவுந்தர பாண்டியன்	5—0—0
வந்தவாசி வா. கே ஆதிகேசவலு மூலம்	2—2—0
வளவனூர் தி மு. கழகம் என். ராமதேவன்	100—0—0
தோழர் எ. கோவிந்தசாமி எம். எல் ஏ, மூலம் வசூல்:—	
தேவபாண்டலம் தி மு கழகப் பொதுக்கூட்ட உண்டி வசூல்	32—4—0
தியாகதுர்க்கம் தி. மு. கழகம்	2—0—0
சங்கராபுரம் ஷம்சுதீன்	1—9—3
கள்ளக்குறிச்சி இளைஞர் தி மு. கழகம்	0—7—6
சாத்தமங்கலம் சொக்கலிங்கம்	10—0—0
விருத்தாசலம் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்	14—3—0
தெ. ஆ. மாவட்டச் செயலாளர் பாலகுருசாமி அவர்கள் கணக்கில் வாக்களித்த தொகையில் பாக்கி நிற்கும் தொகையில்	10—0—0
தோழர் என். வி. நடராசன் மூலம்:—	
ராயபுரம் (தஞ்சை) தி மு. க. பொதுக்கூட்ட வசூல்	6—7—9
பெண்ணாடம் பள்ளி மாணவர்கள் க. அப்பாதுரையார் மூலம்	1-11—0
தோழர் நெடுஞ்செழியன் மூலம்:—	
பிரான்மலை அறிஞர் அண்ணா மன்றம்	3—2—3
தாய்ப்பாய் ராவணன்	1—9—3
திருச்சி எம். வேலாயுதம் மூலம்:—	
பி. சந்திரகாசம் பிள்ளை	2—0—0
கந்தையா	2—0—0
வைத்தியலிங்கம்	1—0—0
பாலசுப்ரமணியம், நல்லசாமி, முத்துகிருஷ்ணன், கந்தன், பழனி, ஜனார்தனம், வேலாயுதம், ஆகியோர்	2—4—0
சேலூர் (வ. ஆ) வி. இ ஜெயராமன்	25—0—0
கொடைக்கானல் தி மு. கழகம் எச். முகமது ஆதம்	25—0—0
நாகப்பட்டினம் தி. மு. கழகம்	51—0—0
மலேயா வாழ் தோழர்கள் நாகப்பட்டினம் தி. மு. கழகம் மூலமாக:—	

(4-ம் பக்கம் பார்க்க)

தொழில்துறைத் தகராறுகள்

நடைபெற்ற விவரங்கள்

புதுடில்லி, ஏப். 3—

1954 ஜனவரியில், தொழில்துறைத் தகராறுகளின் எண்ணிக்கை முந்திய மாதத்திலிருந்ததைவிடக் குறைந்திருப்பதாகவும் தகராறுகளில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை மாத்திரம் அதிகரித்துள்ளதாகவும் தெரிகிறது. டிசெம்பர் மாதத்தில் மொத்தம் 75 தகராறுகள் ஏற்பட்டன; அவற்றில் மொத்தம் 49,500 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

டிசெம்பர் மாதத்தில் ஏற்பட்ட தகராறுகளில், ஒன்பது கதவடைப்பு காரணமாக ஏற்பட்டவையாகும். அவைகளில் மொத்தம் 4,871 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

தொழில்துறைத் தகராறுகள் சம்பந்தமாக ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை நீங்கலாக, இவற்றில் சம்பந்தப்படாத வேறு ஏழு வேலை நிறுத்தங்களும் இந்த மாதம் ஏற்பட்டன. அவற்றில் மொத்தம் 1,53,588 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

1954 ஜனவரி மாதத்தில் மொத்தம் 53 தகராறுகள் முடிவடைந்தன; அவைகளில் 37 தகராறுகள் ஐந்து நாட்களுக்கு மேல் நீடிக்காதவை; மூன்று தகராறுகள் 30 நாட்களுக்கு மேல் நீடித்திருந்தன. சம்பளம், படி, போனஸ் முதலியன 34 தகராறுகளில் பிரதானமாக இருந்தன; 16 தகராறுகள் சிப்பந்திகள் பற்றியவையாகும். 16 தகராறுகளில் தொழிலாளருக்கு முழு வெற்றியோ அல்லது ஓரளவு வெற்றியோ கிடைத்தது; 24 தகராறுகளில் அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. 11 தகராறுகளில் முடிவு நிச்சயமில்லாமலும், 2 தகராறுகளில் முடிவு தெரியாமலும் இருந்தன.

கொடுங்கையூர் தி. மு. கழகத் துவக்க விழா

கொடுங்கையூர், ஏப். 5—

4—4—54 மாலை 7 மணிக்கு சென்னைக்கடுத்த கொடுங்கையூர் (முலக்கடை) தி. மு. கழகத் துவக்க விழா பொதுக்கூட்டம், தோழர் இன்பரசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் நடிகமணி டி. வி. நாராயணசாமி வி. எஸ். கோவிந்தராசன், மதுரை எம். அய்யாச்சாமி, முதலை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசினர்.

சென்னை—எழுகிணறு தி. மு. கழகம்

சென்னை, ஏப். 3—

21—3—54 காலை 10 மணிக்கு கழக இல்லத்தில் தோழர் வி. முனுசாமி தலைமையில் 9-வது வட்டம் கழக உறுப்பினர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, எ. எஸ். இராமன் அவர்களுடைய செயலாளர் ராஜிநாமா ஏற்றுக்கொள்ளப்பட்டு, புதிய செயலாளராக தோழர் வி. முனுசாமி, துணைச் செயலாளராக தோழர் ம. கரிகாலன், பொருளாளராக தோழர் ஏ. என். இராமன், மாவட்டப் பிரதிநிதிகளாக தோழர்கள் மு சா. இளங்கோ, தே. செல்வபதி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

சௌந்திரபாண்டியன் படிப்பகம்

படிப்பகத்திற்கு தோழர்கள் எம். துரை, தே செல்வபதி ஆகியோர் பொறுப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அடுத்த காங்கிரஸ் தமிழ் நாட்டில்

புதுடில்லி, ஏப். 4—

1955 ஜனவரியில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் தமிழ் நாட்டில், மதுரையிலோ அல்லது சென்னை நகரிலோ நடத்தப்படலாம் என்று தெரிகிறது. இந்த இதைப்பற்றி தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்கள் விவாதித்ததாகத் தெரிகிறது.

1927-ல் சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் டாக்டர் அன்சாரி தலைமையில் கூடிற்று.

இந்த முடிவை இன்றைய காங்கிரஸ் காரியக் கமிட்டியில் முடிவு செய்யப்பட்டது.

மின்சார விளக்கு திறப்பு விழா

1—4—54 மாலை 5 மணிக்கு கண்டியூர் பஞ்சாயத்து போர்டு அலுவலகத்தின் முன் அமைந்திருந்த பந்தலில், சட்டசபை திராவிட பார்லிமெண்டரிக் கட்சித் தலைவர் தோழர் எஸ். சுயம்பிரகாசம பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., தலைமையில் மின்சார விளக்கு திறப்பு விழா நடைபெற்றது. அவ்வமயம் போர்டு தலைவர் ஜெ. எம். அலாவுதீன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தலைவரவர்கள் கிராமப் பஞ்சாயத்தின் பழையகால முறையையும், இடையிடையே ஏற்பட்ட மாறுதல்களும் பற்றி விளக்கிப் பேசி மின்சார விளக்கைத் திறந்து வைத்தார்.

தோழர் எம். அப்பாவு தலைவர்கள் படத் திறப்பு விழாவாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் விழாவில் நாதசுரம் வாசித்த என். குருசாமிக்கு 'குழலிசை அரசு' என்ற பட்டம் விழாத் தலைவரால் வழங்கப்பட்டது.

பேச்சிமுத்து-தனலட்சுமி திருமணம்

மதுரை. ஏப். 3—

நடந்த 7—2—54 அன்று கொந்தகையில் நடந்த பேச்சிமுத்து—தனலட்சுமி திருமணத்தின்போது, மணமக்களின் சார்பாக, தூத்துக்குடி சதிவழக்கு நிதிக்காக ரூ 3-ம், "நம் நாடு" வளர்ச்சிக்காக ரூ 2-ம் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது—வரப்பெற்றோம்— நன்றியுடையது—பொறுப்பாளர்.

நன்றி

இலங்கை, ஏப். 3—

ஈழ நாட்டின் இந்தியப் பிரதிநிதி காரியாலய அறிவிப்புப் பலகையில் வண்டமிழை வரையமறந்து—வரைய மறுத்து இந்தியிலும் ஆங்கிலத்திலுமே எழுதப்பட்டிருந்தன. இதைக் கண்டித்து 7—2—54ல், நடைபெற்ற சேதவத்தை தி. மு. க செயற்குழு கூட்டத்தில், இந்தியப் பிரதிநிதி காரியாலய அறிவிப்பு பலகையில் தமிழிலும் இடம்பெற வேண்டுமென்று தமிழின் முக்கியத்தை உணர்த்தி தீர்மானம் ஒன்று நிறைவேற்றி — இந்தியப் பிரதிநிதிக்கும் இந்திய வெளிநாட்டிலாகா காரியாலயத்திற்கும் அனுப்பப்பட்டது. இந்தத் தீர்மானத்தை ஏற்று இப்பொழுது தமிழில் நான்கு அறிவிப்புப் பலகைகள் அமைத்தமைக்கு கழகச் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மறைவு

சென்னை, மயிலாப்பூர் தி. மு. கழக முன்னாள் செயலாளர் பொன். ரு. கோதண்டபாணி அவர்களின் ஆண் மகவு 1-4-54ல் இறந்த செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.—(ஆ-ர்.)

பொதுச்செயலாளர் பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரட்டும்.

ஆச்சாரியார் ஆட்சி, அத்துக் குடியிலும், டால்மியாபுரத்திலும், பொது மக்களை, சுட்டுப் பொசுக்கியதை நடைபெறும்; அத்துடன், கல்வித் திட்டத்தை, எதேச்சாதிகாரத்தை எதிர்த்து அறப்போர் தொடுத்த வீரர்கள், இன்றும், வழக்கு மன்றத்திலே நிறுத்தப்பட்டு பழிவாங்கப்படுவதை உலகறியும்—தூத்துக்குடி வழக்கில் ஏப்ரல் 10-ல் தீர்ப்பும் கூறுவர். எளித பழி வாங்கும் செயல்?

ஆச்சாரியார் ஆட்சிப் போக்கு நீதிக்கு இடமற்றது என்பதை, காங்கிரஸ் கட்சியே ஒப்புக்கொண்டு அவரை விலக்கிய பின் அவரது ஆட்சியில் தொடுக்கப்பட்ட வழக்கை, புது மந்திரி சபை ஏன் வாபஸ் பெறக் கூடாது?—நியாயத்தின் பேரால் நீதியின் சார்பில், திராவிட மக்களின் உரிமையின் பேரால் கேட்கிறேன்-வருகின்ற அமைச்சர் குழு, தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை உடனே வாபஸ் வாங்கவேண்டுமென்று! வழக்கை விலக்கி, சிறைப்பட்டுள்ளவர்களையும் விடுதலை செய்து, ஆச்சாரியார் நடத்திய ஆட்சியின் கொடுமையை துடைக்க வேண்டுமென விரும்புகிறேன்.

அறிவை அலட்சியப்படுத்தும் 'அய்யர்' அதிகாரத்தைக் காட்டி மிரட்டுவதா?

'சுதேசமித்திரன்' இதழில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக அமர்ந்து கொண்டுள்ள சர். சி. பி. இராமசாமி ஐயர், "ஆரியர்—திராவிடர் வேற்றுமையெல்லாம் பொய்யே" என்று, பேசியுள்ளதைக் கண்டேன்.

பல்கலைக் கழக மாணவர் கூட்டத்தில், திராவிட இயக்கத்தலைவரும் சென்று பேசுவதற்கு இடமின்றி, மாணவரது உரிமையையும் தடைசெய்து விட்டுத்தான், சர். சி. பி. இந்த உபதேசத்தை நடத்துகிறார்.

ஆரியர் — திராவிடர் வேற்றுமை பொய்யென்றால், அவர், தம் விருப்பம்போல் பேசிக்கொள்வதுபோல, நம்மையும் அனுமதித்துப் பார்ப்பதுதானே! அனுமதிப்பதுகூட இருக்கட்டும்; அண்மையில், அப்பல்கலைக் கழகத்தின், வெளியிலே ஒரு கூட்டம் நடத்தி, என்னிடம் அத்துக்குடி நிதி வழங்கினார்கள் என்பதற்காகவே அந்த மாணவர்களையெல்லாம் கூப்பிட்டு, அதிகாரத்தைக் காட்டி அச்சுறுத்தியுள்ளார் என்று கேள்விப்படுகிறேன், நான்!

நாட்டிலே திராவிடர் இயக்கம் புகாத இடமில்லை; எக்காரத மக்கள் இல்லை; மாணவர்கள் 'திராவிடர்' 'ஆரியர்' உண்மையை உணர்ந்துகொண்டு விட்டனர்; அவர்களிடம் திராவிட இயக்கத்தார் பேசக்கூடாது, அரசியலில் மாணவர் கலக்கக்கூடாது என்று சொல்லும் 'ஐயர்' தான்மட்டும், அரசியல் பற்றி பேசுகிறார், 'அறிவை'யே அலட்சியப்படுத்தும் வகையில்!

'சுதேசமித்திரனி'ல் காணப்படும் அந்தப் பேச்சிலேயே, திராவிடர்கள் அன்று சிறந்த வாழ்வும், பெருமையும், வரலாற்றுச் சான்றும் குறிப்பிடப்படுகிறது, அவரால்! மொகஞ்சதாரோ, ஹாரப்பா—ஆகியவை அதையுமுன் பெற்றிருந்த சிறப்பை அவரே கூறுகிறார்—தாம் ஆரியர் என்று சொல்லிக்கொள்ளும் தைரியம் இன்மையால்!

அவருக்கு மட்டுமல்ல, அந்த மரபினருக்கே, 'ஆரியர்' என்று சொல்லிக்கொள்ள அருவருப்பாக, வெட்கமாக இருக்கிறது. ஆரியத்தின் வரலாற்றை, அதனால் ஏற்பட்ட விளைவுகளை வரிசைப்படுத்தினால், 'ஆரியர்' என்று சொல்லிக்கொள்ள வெட்கமாகத்தான் இருக்கும்!

இது: திராவிட நாடு [illegible] யால், இந்த திராவிடர் என்று கூறிக்கொள்வதுதான் [illegible] என்று பார்ப்பனரும் [illegible] தொடங்கி விட்டனர்; [illegible] தான், அண்மையில் [illegible] நடந்த 'பிராமண [illegible] களும் திராவிட[illegible] அவர்கள் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில், 'ஆரியர்—திராவிடர்' என்பது அபத்தம் என்று [illegible] வது, அதிலும், [illegible] கொண்டு பேசுவது, பரிகாசத்திற்கே இடந்தருவதாகும். அவர் கருத்திலே அவருக்கு நம்பிக்கை இருந்தால், தி. மு. கழகத்தினரோடு வாதம் செய்ய முன் வரட்டும்; சான்றுடன் நிறுவ முயற்சிக்கட்டும். அதுவே அறிவுள்ளவர்க்கு அழகாகும்.

மேலும், இமயம் முதல் குமரி வரை ஒரே நாடு என்றும் அவர் கூறியுள்ளார்—அன்று திருவாங்கூர் திவானாக அவர் இருந்த போது, 'என நாடு தனி; அது இந்தியாவோடு இணையாது' என்று கூறி, சல்லடம் கட்டிய சர். சி. பி!

அந்த அளவு மக்களை, அவர் தனது அரசியல் அறிவை அலட்சியப்படுத்தும் அவரது போக்கு கண்டனத்திற்குரியதாகும்.

இத்தகு அரசியல் கருத்தில் நம்பிக்கை இருந்தால், தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டு, அரசியலிலே ஈடுபட்டு, தேர்தலில் நின்று பார்க்கட்டும்! பிரச்னைகள் புரியும் — தெளிவும் ஏற்படும், அப்போது!

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"திராவிட நாடு திராவிடருக்கானால், ஆட்சி எப்படிப்பட்டதாக இருக்கும்," என்று பொது மக்கள் ஆவலாகக் கேட்கின்றனர்.

திராவிட நாடு உரிமை பெற்று, ஆட்சி நடக்கும் போது, மக்களின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை அரசாங்கம் நிறைவேற்றத் [illegible].

ரமண ஆசிரமச் சொத்துக்கள்

—:o:—

அரசாங்கம்மேற்கொள்ள வேண்டும்!

ரமணரின் சீடர் உண்ணாவிரதம்!

ரமணருடன், 15 ஆண்டு பழகியவரும் அவரது சீடருமான 'சிவசாராவ்' என்பவர், கடந்த பல நாட்களாக உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

ரமண ஆசிரமத்தின் உடைமைகளை அரசாங்கம் ஏற்று நிர்வகிக்க வேண்டும் என்பதே அவரது கோரிக்கையாகும்.

ஆசிரமத்தில் ஊழல்கள் நிறைந்துள்ளதாகவும், ஏழைகளுக்குச் சரிவர உணவும் அளிக்கப்படவில்லை எனவும், தற்போதைய நிர்வாகிகள், சுரண்டுகின்றனர் என்றும் அவர் குற்றஞ் சாட்டுகிறார். நகரப் பெருமக்கள் சிலர், உண்ணாவிரதத்தைக் கைவிடும்படிக் கூறியும் அவர் மறுத்து விட்டார்.

குற்றச் சாட்டு!

வாஷிங்டன், ஏப். 5—

வட இந்தோ — சீனாவில் இப்போது கடும்போர் நடக்கும் டியன்—பியன் — பூவில் வியட்மின் விமான எதிர்ப்புப் பீரங்கிகளைக் கம்யூனிஸ்டு சீன இராணுவத்தினர் இயக்குவதாக அமெரிக்க ராஜாங்க மந்திரி டல்லஸ் குற்றஞ் சாட்டினார்.

உண்ண உணவு, உடுக்க ஆடை, குடியிருக்க வீடு, என்ற அடிப்படைத் தேவைகள் திராவிட நாட்டவர் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்படிச் செய்வதே நமது குறிக்கோள்.

தனிப்பட்ட முதலாளிகள் கொழுக்கவும், ஏழை வாடி வதங்கவும் இடமிருக்காது. மக்கள் தேவைகள் அனைத்தும், இன்றியமையாத பொருளெல்லாம், தனிப்பட்ட முதலாளிகளிடத்தில் விடப்பட மாட்டாது. மக்களுக்கு எளிதில் கிடைக்கும்படி அரசாங்கமே பொறுப்பேற்று அத்தொழில்களை நிர்வகிக்கும்."

புதுவையில் இராணுவப் பாதுகாப்பு

மேலும் மூன்று கிராமங்கள் விடுதலை பெற்றன

புதுச்சேரி, ஏப். 5—

இந்தோ சீனா போர்முனையிலிருந்து விடுமுறையில் வந்திருக்கும் பிரெஞ்சிந்திய இராணுவ அதிகாரிகள், துருப்புகள், இராணுவப் பென்ஷன்தார்கள் ஆகியோர் (மொத்தம் 300 பேர்) சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ரைபிள்கள், கைத்துப்பாக்கிகளுடன் தெருக்களில் ரோந்து வந்துகொண்டிருக்கிறார்கள்.

இரண்டு பேருக்கு மேல் கூடக்கூடாது என்ற தடையை இராணுவத்தினரும், போலீசாரும் கண்டிப்பாக அமுல் நடத்தி வருகிறார்கள்.

இத் துருப்புகள் சென்றவாரம் வைகோலுக்குப் புறப்படுவதாக இருந்தன; ஆனால், அதிகாரிகள் அவர்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

சாதாரணமாக புதுச்சேரியில் துருப்புகள் நிறுத்திவைக்கப்படுவதில்லை.

பாகூர் கம்யூனில் மேலும் 3 கிராமங்கள் இன்று விடுதலை பெற்றன.

குபேர், முத்துகுமரப்ப செட்டியார், புதுவை மேயர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மூதாயப் பிள்ளை ஆகியோர் இந்த கிராமங்களில் நுழைந்தனர்.

* * *

காளான் கிளம்புகிறது!

காரைக்கால், ஏப் 5—

இணைப்பை எதிர்ப்பவர்கள் இப்போது காரைக்காலில் ஒரு வீட்டுக்குள் பி. கோவிந்தசாமி பிள்ளை என்ற ஒருவர் தலைமையில் கூடி ஒரு புதிய கட்சியை அமைத்திருக்கிறார்கள். அதற்கு "மூன்றாவது கட்சி" என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காமராசரின்.........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சென்னையில் புது மந்திரி சபை அமைப்பது குறித்து, விவரம் கொண்டதாகக் கூறும் ஆச்சாரியாருக்கும், [illegible] தெருவுக்கும் அப்போதைக்கப்போது செய்தி பரிமாறல்கள், ஆலோசனைகள் நடந்து வருகின்றனவாம் தெரிகிறது. என்ன செய்திகள் போய் வருகின்றன [illegible] பரம இரகசியமாகவே உள்ளது.

யார் ஆள்வதானாலும், ஆச்சாரியார் தமது ஆசாமிகளுக்கு எப்படியோ இருக்கும்படி சூழ்ச்சி செய்ய [illegible] விடுவார் என்றும், இரகசியம், என்ன என்ன தொல்லையைத் தருமோ என்றும் இங்கு பேசப்படுகிறது.

தோழர் சங்கரன் சவ அடக்கம்

—::—

தோழர்கள் பாராட்டுரை

திருச்சி, ஏப்ரல் 5—

4—4—54 ஞாயிறு பகல் 12 மணிக்கு திருச்சி தோழர் என். சங்கரன் அவர்கள், தமது 47-வது வயதில், இருதயத்தின் காரணமாகத் திடீரென இறந்த செய்தி எங்கும் பரவி ஏராளமான இயக்கத் தோழர்களும், பொதுமக்களும் வந்து கூடி தமது இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

5—4—54 திங்கள் பகல் 11 மணிக்கு என். எஸ். பங்களாவிலிருந்து பிரேத ஊர்வலம் புறப்பட்டு நகரின் பல தெருக்களின் வழியாகச் சென்று சங்கரன் அவர்களுடைய தோட்டத்தில் சவ அடக்கம் செய்யப்பட்டது. அதுசமயம் ஆயிரக்கணக்கான இயக்கத் தோழர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

தோழர் எம். பழனியாண்டி எம் எல் ஏ. தலைமையில் தோழர்கள் எம் எஸ். மணி, ஸ்ரீ பாலகுருசாமி, டாக்டர் ராஜூ பிள்ளை, என் பிரான்ஸிஸ், டி.டி. வீரப்பா, [illegible] பெருமாள், டீ. கே. ரெங்கசாமி, மற்றும் பல்வேறு கட்சித் தோழர்கள் சங்கரன் அவர்கள் செய்த தொண்டை எடுத்துப் பேசி இறுதி வணக்கம் செலுத்தினர்.

குறிப்பு:—மறைந்த என். சங்கரன் அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் நான்கு பெண் மக்களும் உண்டு. அவர் 17 ஆண்டுகள் திருச்சி நகரமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

ஜாமீனில் வெளிவந்தார்; ஆனால், கைது!

ஜார்ஜ்டவுன், ஏப். 5—

டாக்டர் செட்டி ஜகன் 50-பவுன் ஜாமீனில் விடப்பட்டார். மீண்டும் அவர் அவசரச் சட்டத்தை மீறியதாகவும், சட்டவிரோதமாகக் கூட்டம் போட்டதாகவும் கைது செய்யப்பட்டார். அவருடன் மற்றொரு தலைவரும் கைது செய்யப்பட்டார்.

மண்பாண்டத் தொழிலாளர் வெற்றி

வாணியம்பாடி, (வ. ஆ.) ஏப். 1—

இந்நகர் மண்பாண்டத் தொழிலாளர்கள் வேலைக்கு வேண்டிய களிமண்ணை, ஏரிகளில் எடுத்துக்கொள்ள சர்க்கார் தடுத்ததையொட்டியும், முனிசிபாலிட்டியின் வரி உயர்வைக் குறைக்குமாறு கோரியும் வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் நகரில் மண்பாண்டம் நெருக்கடி ஏற்பட்டுவிட்டதை அறிந்த சப்-கலெக்டர் மண் எடுத்துக் கொள்ளும்படி உத்தரவிட்டார்.

—O—

ஜப்பான், சைனா, ரஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து, அங்கு குடிசைத் தொழில் முறைகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள விரும்புவதாக கான் அப்துல் கபார்கான் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்கள் [illegible] அழகிரி, அக்கையார் [illegible] (26, [illegible] சேட்டுத் தெரு [illegible]புரம்) [illegible] ஆகிவிட்டார். [illegible]

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ந. ராமு	7—8—0
மு. தேவராசன்	7—8—0
வி. கோவிந்தராசு	7—8—0
டி. ஆர். ராசன்	6—0—0
ம. மும்மூர்த்தி	5—0—0
கே. ஆர். பத்மநாபன்	5—0—0
கா. அ. நாகராசன்	4—8—0
அ. நீலமேகம்	4—8—0
ஆ. சு. சுப்ரமணியம்	3—0—0
ப. முத்துகிருஷ்ணன்	3—0—0
ஆர். பி. கோவிந்தசாமி	3—0—0
ந. செ. குழந்தைசாமி	3—0—0
அ. பக்கிரிசாமி	3—0—0
எம். காளிமுத்து	3—0—0
டி. என். ராசன்	3—0—0
டி. என் மோகன்	3—0—0
டீ. கோவிந்தராசு	3—0—0
கே. சங்கரன்	3—0—0
மா. கோவிந்தசாமி	3—0—0
சு. ப. கலியபெருமாள்	3—0—0
ந. ராமகிருஷ்ணன்	3—0—0
டி. பி. சாமி	1—8—0
உ. சின்னையா	1—8—0
என். வி. சிவசாமி	1—8—0
ஏ. செல்வராசு	1—8—0
செ. ராமசிவம்	1—8—0
மு. திருமலை	1—8—0
கா. தங்கவேலு	1—8—0
இ. மா. ராமச்சந்திரன்	1—8—0
செ. கோவிந்தராசன்	1—8—0
செ. நாராயணன்	1—8—0
வி. மாணிக்கம்	1—8—0
ம. கோவிந்தசாமி	1—8—0
சி. பி. சிவலிங்கம்	1—8—0
ஆர். சோதண்டபாணி	1—8—0
எம். சுந்தரம்	1—8—0
எ. அசன்முகம்மது	1—8—0
எம். பாலையா, கே. ஆறுமுகம், சி. ஆறுமுகம், என். முருகையா, எம். வெல்லையா, பி. செல்லையா முதலியோர்	4—8—0
சென்னை 19-வது வட்டம் தி. மு. கழகச் சார்பில், 4—4—54-ல் நடந்த பொதுக்கூட்டத்தில், பொதுச்செயலாளர் அண்ணா அவர்களிடம்	250—0—0
,, கார்லுட்டிக் மில் தொழிலாளர்கள்	21—0—0
,, 39வது வட்டம் மறுமலர்ச்சி நூல் நிலையம்	19—3—0
ஆக மொத்தம் ரூ.	26,434—1—5

(மேலும் தொடரும்)